# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம், பேர்ன்பேட்டை, (Pension Pay Office பின்புறம்),

நந்தனம், சென்னை–600 035. தொலைபேசி எண்.044–2951 5590

**முன்னிலை**

**திரு.பி.தாமரைக் கண்ணன்,இ.கா.ப.(ஓய்வு),**
**மாறில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். CP 2556/விசாரணை/E/2024**

திரு.K.பாண்டி -- மேல்முறையீட்டாளர்

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர்/மாவட்ட ஆட்சியரின்
நேர்முக உதவியாளர்(பொது),
மாவட்ட ஆட்சியர் அலுவலகம், மதுரை – 625 020. .. பொது அதிகார அமைப்பு

******

**இறுதி ஆணை**

இவ்வழக்கின் மீது இவ்வாணையத்தால் 10.03.2026 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் அடிப்படையில், மதுரை மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(பொது)/பொதுத் தகவல் அலுவலர் சார்பாக மதுரை மாவட்ட ஆட்சியரின் கூடுதல் நேர்முக உதவியாளர்(நிலம்) திருமதி.பா.வெற்றி செல்வி 15.05.2026 அன்று ஆணையத்தில் நேரில் ஆஜராகி, ஆணையத்தின் உத்தரவுப்படி, மதுரை மாவட்ட வருவாய் அலுவலரின் 13.05.2026 தேதியிட்ட அறிக்கையை ஆணையத்தின் முன் தாக்கல் செய்தார்.

2. மதுரை மாவட்ட வருவாய் அலுவலர் 13.05.2026 தேதியிட்ட தனது அறிக்கையில், முன்னாள் பொதுத் தகவல் அலுவலர்/தற்போது அலங்காநல்லூர் வட்டார வளர்ச்சி அலுவலர்(வ.ஊ.) திருமதி.பொ.வள்ளி என்பவரின் 08.05.2026 தேதியிட்ட எழுத்துமூலமான விளக்கத்தை இணைத்து சமர்ப்பித்துள்ளார். முன்னாள் பொதுத் தகவல் அலுவலர் 08.05.2026 தேதியிட்ட தனது எழுத்துமூலமான விளக்கத்தில், மேல்முறையீட்டளாரின் 03.04.2024 தேதியிட்ட தகவல் அறியும் சட்ட மனுவானது முதலில் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(பொது) அவர்களுக்கு சென்று, 16.04.2024 அன்று தங்கள் அலுவலகத்தில் பெறப்பட்டு, மேல்முறையீட்டாளருக்கு உரிய தகவல்கள் 20.05.2024 அன்று பதிவஞ்சல் மூலம் அனுப்பப்பட்டு 22.05.2024 அன்று மேல்முறையீட்டாளரால் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது என்றும், மேல்முறையீட்டாளருக்கு 6 நாட்கள் தாமதமாக பதில் வழங்கப்பட்டுள்ளது என்றும், இதில் மேல்முறையீட்டாளருக்கு தகவல் வழங்கக்கூடாது அல்லது தாமதமாக வழங்க வேண்டும் என்ற எவ்வித உள்நோக்கமும் இல்லை என்றும், இனி வருங்காலங்களில் இதுபோன்ற காலதாமதம் ஏற்படா வண்ணம் மேல்முறையீட்டாளருக்கு வழங்குகிறேன் என்றும் தெரிவித்துள்ளதை ஏற்று, அவர் மீதான நடவடிக்கையை இவ்வாணையம் இத்துடன் கைவிடுகிறது.

3. ஆகவே, இவ்வழக்கில் தகவல் வழங்குவதை பொறுத்தமட்டில், இவ்வழக்கினை முற்றாக்கம் செய்து உத்தரவிட்டுள்ள நிலையில், இவ்வழக்கின் மீது மேலும் விசாரணை மேற்கொள்ள ஏதுமில்லை என்று தீர்மானித்து, இவ்வழக்கினை இத்துடன் முற்றாக்கம் செய்து இவ்வாணையம் உத்தரவிடுகிறது.

**ஆணை நாள்: 01.06.2026**

**ஒம்/-.பி.தாமரைக் கண்ணன்,**
**மாநில தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். CP 2556/விசாரணை/E/2024</u>**

பெறுநர்
மேல்முறையீட்டு அலுவலர்/
மாவட்ட வருவாய் அலுவலர்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
மதுரை – 625 020.

பொதுத் தகவல் அலுவலர்/மாவட்ட ஆட்சியரின்
நேர்முக உதவியாளர்(பொது),
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
மதுரை – 625 020.

திரு.K.பாண்டி
38 நேரு தெரு,
களத்துப்பொட்டல்,
தத்தனேரி, மதுரை-625 018.

Copy to: Files

RJ/PS 1.6